[1972 சனவரி 29

சென்னை—கோவை துரித ரயில் வண்டி

*143 வின.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும், சென்னைக்கும் இடையில் புதிதாக துரித (அதிவேக) ரயில் வண்டி விடுவது குறித்து மத்திய அரசினை வலியுறுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவையில் இருந்து சென்னைக்கு வருவதற்கு இப்போது ஒரே ஒரு வண்டி--நீலகிரி எக்ஸ்பிரஸ்தான் இருக்கிறது. அங்கிருந்து சென்னை வந்து செல்லும் மக்கள் தொகை அதிகமாக இருக்கும் காரணத்தால் ஒரு சூப்பர் எக்ஸ்பிரஸ் விடுவதற்கு மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோவையிலிருந்து நீலகிரி எக்ஸ்பிரஸ் மாத்திரம் வருவதாகச் சொல்லுவது சரியல்ல.

At present five Express and Mail trains namely, Nilgiris Express, Kerala Express, Cochin Mail, West Coast Express and Mangalore Mail pass through Coimbatore.

அதிக வேக ரயில் விடுவது பற்றி ரயில்வே இலாகாவைக் கேட்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ரயில்வே இலாகாவால் பரிசீலிக்கப்படும் என்று நம்புகிறேன்.

அணைப்பட்டியில் பெரியாற்றின் குறுக்கே பாலம்

*144 வின—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறுக் கால்வாயில் அணைப்பட்டி என்னுமிடத்தில் உள்ள பாலத்தைப் புதுப்பிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அந்த வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சசதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இவ்வேலைக்கு அரசு அனுமதி அளித்தபின் துவங்கும்.